# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:145** **தேதி:-30.01.2017**

**BSNLன் வருவாய் உயர்வு மற்றும் பல மத்திய சங்க செய்திகள்**

அன்பார்ந்ததோழர்களே,

**2016 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்திற்கு BSNLன் நஷ்டம் 4890 கோடி ரூபாய்களாக குறைந்துள்ளது என்பது ஒரு நல்ல செய்தி. 2015 ஆம் ஆண்டின் இதே காலத்தில் BSNL நிறுவனத்தின் நஷ்டம் 6121 கோடி ரூபாய்களாக இருந்தது. 2015ஆம் ஆண்டில் 18,314.9 கோடி ரூபாய்களாக இருந்த சேவை மூலமான வருவாய் என்பது 2016 ஆம் ஆண்டில் 19,379.6 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. எப்போதுமே கடைசி காலாண்டு என்பது வலுவாக இருக்கும் என்பதால் இந்த நிதி ஆண்டிற்கான நஷ்டம் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**ஒப்பந்த ஊழியர் பிரச்சனைக்காக பாரளுமன்றம் நோக்கி பேரணி:-** அகில இந்திய ஒப்பந்த ஊழியர்களின் அமைப்பான BSNL CCWF ஒப்பந்த ஊழியர் மற்றும் தற்காலிக ஊழியர் பிரச்சனைகளை முன் வைத்து 22.02.2017 அன்று பாராளுமன்றம் நோக்கிய பேரணிக்கு அறை கூவல் விடுத்துள்ளது. ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளுக்கான போராட்டங்களில் BSNL ஊழியர் சங்கம் எப்போதும் முன்னணிப் பாத்திரம் வகித்து வருகின்றது. தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளுக்கான இந்த போராட்டத்தில் நிரந்தர ஊழியர்களும் பெருமளவில் பங்கேற்க வேண்டுமென சென்னையில் நடைபெற்ற 8வது அனைத்திந்திய மாநாடு அறைகூவல் விடுத்தது. எனவே நிரந்த ஊழியர்களும் இந்த பாராளுமன்றம் நோக்கிய பேரணியில் அதிக அளவில் பங்கேற்று வெற்றி பெறச்செய்வோம்.

**அதிகாரிகளின் சங்கங்களின் மீதான பழிவாங்குதல்களை ரத்து செய்க:-** அதிகாரிகள் சங்கங்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், தர்ணா ஆகிய போராட்டங்களில் பங்கு பெற்றவர்களுக்கு ஊதிய வெட்டு உள்ளிட்ட பல பழிவாங்குதல்களை நிர்வாகம் தொடுத்துள்ள சூழ்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சங்கங்களின் பொது செயலாளர்கள் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் C.C.சிங் ஆகியோர் இந்த பழி வாங்குதல்களை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா அவர்களை நேரில் சந்தித்து கடிதம் கொடுத்து கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்களின் கோரிக்கையை பரிசீலிப்பதாக அவர் பதிலளித்துள்ளார்.

**BSNL மொபைல் APPகளை தடை செய்யக் கோரி தனியார் நிறுவனங்கள் TRAIஇடம் முறையீடு:-** BSNL நிறுவனம் தற்போது APP மூலமாக “LIMITED FIXED MOBILE TELEPHONE(LFMT)” என்ற சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சேவையின் மூலம் சந்தாதாரர்கள் தங்களின் மொபைல் தொலைபேசியை, லேண்ட் லைன் தொலைபேசி அழைப்புகளுக்காக CORDLESS தொலைபேசிகளை போல பயன்படுத்திக் கொள்ளலாம். TRAIயின் விதிகளை BSNL நிறுவனம் தவறாக பயன்படுத்துவதாக கூறி தனியார் நிறுவனங்களின் கூட்டமைப்பான COAI, TRAiயிடம் புகார் தெரிவித்துள்ளது.

**இந்திய ரயில்வேக்களில் தனியார் மயமாக்கல் துவக்கம். BSNL ஊழியர் சங்கம் கண்டனம்:-** இந்திய ரயில்வேக்களை படிப்படியாக தனியார்மயமாக்கும் அரசின் முயற்சிகளுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. மலை வாசஸ்தலங்களை இணைக்கின்ற பாரம்பரியமான சேவைகளை தனியாருக்கு தாரை வார்க்கும் பணி துவங்கி உள்ளதாக தெரிய வந்துள்ளது. சிம்லாவை கல்காவுடனும், டார்ஜிலிங்கை சிலிகுரியுடனும், உதகமண்டலத்தை மேட்டுப்பாளையத்துடனும், இணைக்கின்ற வழித்தடங்களையும், நேரல், மதேரன் மற்றும் கங்ரா பள்ளத்தாக்கு ரயில் போக்குவரத்தையும், முதல் கட்டமாக பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. அவர்கள் ரயில் போக்கு வரத்தை மட்டுமல்லாமல், அந்த தடங்கள், மற்றும் அந்த தடங்களில் உள்ள ரயில் நிலையங்களை பராமரிப்பதோடு, அந்த ரயில் நிலையங்களை சொந்தமாக்கியும் கொள்ளலாம். இந்த சேவைகளுக்கான கட்டணங்களை அரசாங்கம் புதியதாக உருவாக்க உள்ள ரயில் மேம்பாட்டு ஆணையத்தின் ஒப்புதலோடு அவர்கள் நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்படுவார்களாம்.

**குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை 180 நாட்களாக உயர்த்துக:-** 31.03.2016 அன்று DOP&T வெளியிட்டுள்ள உத்தரவின் அடிப்படையில் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை தத்தெடுக்கும் பெண் ஊழியருக்கு 135 நாட்கள் விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது. 6வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த விடுப்பினை 180 நாட்களாக உயர்த்த DOP&T உத்தரவு வெளியிட்டுள்ளது. ஆனால் இந்த உத்தரவை BSNL நிறுவனம் இன்னமும் அமல் படுத்தவில்லை. அதனை அமல் படுத்த வேண்டுமென BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

**அனைத்து சங்கங்களின் கூட்டம் 06.2.2017ல் நடைபெறும்:-** துணை டவர் நிறுவனம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை, BSNL தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள கடிதம், ரிலையன்ஸ் ஜியோ தொடுத்துள்ள போட்டியை சந்திப்பது மற்றும் BSNL நிறுவனத்தின் 4G உள்ளிட்ட விஷயங்களை விவாதிப்பதற்காக BSNL MS அலுவலகத்தில் 06.02.2017 அன்று மாலை 3.00 மணிக்கு அனைத்து சங்கங்களின் கூட்டம் நடைபெற உள்ளது. பிரதமர் அலுவலகத்தில் இருந்து நிதி ஆயோக்கின ஆலோசனையான BSNL உள்ளிட்ட நிறுவனங்களை மூடுவது தொடர்பான கடிதம் தொடர்பாக ஒரு விரிவான கடிதம் ஒன்று FORUM சார்பாக 25.01.2017 அன்று பிரதமருக்கு எழுதப்பட்டுள்ளது.

**700MHz ஸ்பெக்டரம் வழங்க அரசாங்கத்தை BSNL நிர்வாகம் கோரியுள்ளது:-** அனைத்து தனியார் நிறுவனங்களும் 4G சேவை வழங்க துவங்கியபின்னும் BSNL அதனை வழங்க ஆரம்பிக்கவில்லை. இது DATAக்களின் காலமாக உள்ளதால் 4G சேவை வழங்காமல் BSNLஆல் நீடிக்க இயலாது. அதனை வழங்க கூடுதல் ஸ்பெக்ட்ரம் தேவை. இதற்காக 700 MHz ஸ்பெக்ட்ரத்தை BSNLக்கு வழங்க வேண்டும் என நிர்வாகம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த ஸ்பெக்ட்ரத்தை BSNL நிறுவனத்திற்கு அரசாங்கம் இலவசமாக வழங்க வேண்டும் என சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாடு கோரிக்கை விடுத்துள்ளது.

**பொதுத்துறை நிறுவனங்களின் சுயேட்சையான இயக்குனர்களாக பாஜக ஆட்கள் நியமனம்:-** பொதுத்துறை நிறுவனங்களுக்கு மூடுவிழா காண்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் பாஜக அரசாங்கம், சிறந்த பொதுத்துறை நிறுவனங்களின் சுயேட்சையான இயக்குனர்களாக அந்த கட்சியினை சேர்ந்த 10 நபர்களை புகுத்த முடிவு செய்துள்ளது. இதற்கான முடிவுகளை தேசிய ஜனநாயக கூட்டணியின் அமைச்சரவையின் பணி நியமனக் குழு முடிவு எடுத்துள்ளது. பாஜகவின் டெல்லி துணை தலைவர் ஷாஜியா இல்மி, குஜராத் பாஜக IT அமைப்பாளர் ராஜிகா கட்சேரியா, குஜராத் சிறுபான்மை தலைவர் ஆசிபா கான், முன்னாள் ஒடிசா MLA சுராமா பதி மற்றும் பீகார் முன்னாள் MLC கிரான் கய் சின்ஹா ஆகியோர் இதில் உள்ளடங்குவர். இவர்களை NALCO, BHEL, HPCL, EIL உள்ளிட்ட நவரத்னா அந்தஸ்து பெற்ற பொதுத்துறை நிறுவனங்களின் சுயேட்சையான இயக்குனர்களாக புகுத்த முடிவு செய்துள்ளனர்.

**பணிக்கொடை மாற்றம் தொடர்பான உத்தரவினை உடனடியாக வெளியிடுக:-** 7வது ஊதியக் குழு மத்திய அரசு ஊழியர்கள் பெறும் பணிக்கொடையின் உயர்ந்த பட்ச அளவை பத்து லட்ச ரூபாய்களில் இருந்து இருபது லட்ச ரூபாய்களாக உயர்த்தி உள்ளது. அதனை BSNLல் அமல்படுத்துவதற்கு DOT தனியான ஒரு உத்தரவை வெளியிட வேண்டும். அந்த உத்தரவை உடனடியாக வெளியிட வலியுறுத்தி, நமது மத்திய சங்கம் 25.01.2017 அன்று தொலைத் தொடர்பு துறையின் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளது.

**மனித வள இயக்குனருடன் சந்திப்பு:-** நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் ஜான் வர்கீஸ் AGS ஆகியோர் மனித வள இயக்குனர் திருமிகு சுஜாதாரே அவர்களை 24.01.2017 அன்று சந்தித்து, BUISNESS AREA அமைப்பதில் உள்ள புகார்கள், 17.07.2016 அன்று நடைபெற்ற JAO LICE தேர்வினை மறு மதிப்பீடு செய்வது, ஜாம்ஷெட்பூர், தர்பங்கா மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ள பழிவாங்குதல்கள், தேசியக் கவுன்சில் உருவாக்குவதில் ஏற்பட்டு வரும் அதீத கால தாமதம், ட்ராப்ஸ்ட்மேன் கேடர்களில் இருந்து 50% காலிப்பணியிடங்களுக்காக நடத்தப்படவேண்டிய JTO LICE தேர்வு ஆகிய பிர்ச்சனைகளை விவாதித்துள்ளனர். இவற்றின் மீது தேவையான நடவடிக்கைகள மேற்கொள்வதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**